தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 24, திருவள்ளுவர் ஆண்டு–2054

2023 அக்டோபர் 11, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.”

பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

220—

வாய்க்காலைப் புனரமைத்தல்

***3581—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை (வடக்கு) தொகுதி, பந்தல்குடி வாய்க்காலைப் புனரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வெள்ளச் சேதத் தடுப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 74.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட பந்தல்குடி வாய்க்காலைச் சீரமைக்கும் பணியினை மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இருப்பினும் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை (வடக்குத்) தொகுதியில், மதுரை மாவட்டத்தினுடைய வடக்குப் பகுதியில் உள்ள மலைத்தொடரிலிருந்து அதிகமான கனமழை பெய்து, வெள்ளம் ஏற்படக்கூடிய காலங்களிலே, பந்தல்குடி கால்வாய்தான் மழைநீரை தாங்கி, வைகை ஆற்றிலே கலக்கிறது. அதோடு, அங்கு சுமார் இரண்டு இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கே குப்பைகள் கொட்டப்பட்டு கழிவுகள் சேர்வதால், கொசுத் தொல்லை மற்றும் துர்நாற்றம் வீசுகிறது. கடந்த 2020–2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினை அறிவித்து இருந்தார்கள். அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தைக் கருதி, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்லூர் கண்மாயிலிருந்து மிகை நீர் வருகிறபோது, அதனுடைய வடிகாலாக இந்தக் கால்வாய்மூலம் நீர் வெளியேறுகிறது. இதனுடைய மொத்த நீளம் 2,600 மீட்டர் ஆகும். அந்தப் பகுதி முழுவதும் மட்டுமல்லாமல், அடுத்து இருக்கிற விளாங்குடி, கரிசல்குளம், சிறுநேரி, தத்தநேரி, முடக்கத்தான் ஏரி இப்படி பல ஏரிகள், கண்மாய்கள் இருக்கின்றன. எல்லா பகுதிகளும் இப்போது ஊர்களாகிவிட்டன. மக்கள் குடியேறி விட்டார்கள். ஆகையால், இந்தக் கால்வாயிலே தண்ணீர் செல்வது என்பது மிகக் குறைவாக இருக்கிறது. இருந்தாலும், செல்லூர்

2023 அக்டோபர் 11]

கண்மாயிலிருக்கிற தண்ணீர் மற்ற பகுதிகளுக்குப் போகாமல் இருப்பதற்காகவும், இந்தக் கால்வாயை சீரமைப்பதற்காகவும்தான் நான் இந்தப் பதிலை எடுத்துச் சொன்னேன். 2001–ல் ரூ.74 கோடிக்கு estimate போட்டிருக்கிறார்கள். 2023–2024–ல் அது ரூ.86.13 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. எனவே, நிதி கிடைக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரைதான். மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர். எனவே, இவர்மீது அவருக்குக் கருணை இருந்தால் அடியேன் செய்ய சித்தமாகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அன்பானவர், கருணை உள்ளம் கொண்டவர், எங்களோடு மதுரையிலே இரண்டறக் கலந்தவர். மதுரையினுடைய சூழ்நிலையை நன்றாக அறிந்தவர். செல்லூர் கண்மாயின் அவசியத்தினைக் கருத்தில்கொண்டு, அதற்கான நிதியை ஒதுக்கி எங்களுக்கு மிகப்பெரிய உதவியைச் செய்வாரா என்பதை தங்கள்மூலம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) இல்லை, நிதியமைச்சர்தான் சொல்ல வேண்டுமா? (குறுக்கீடு) நீங்களே சொல்லி விடுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்களுடைய கோரிக்கையை நானும் சேர்ந்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்கள் பயனடையும் வகையில், நீண்ட நாள் எதிர்பார்ப்பான, 70 ஆண்டுக்கால பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

வைக்கும்விதமாக அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதும் (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இருந்தபோதும் இத்திட்டத்திற்காக முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்து, திட்டம் துவங்கப்பட்டு, 95 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை விரைவாக முடித்து, அந்தத் திட்டத்தை துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, காரமடை, பெரியநாயக்கன்பாளையம், எஸ்.எஸ். குளம், தொண்டாமுத்தூர் ஆகிய நான்கு யூனியன்களில் உள்ள குளங்கள் விடுபட்டிருந்தன. முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் விடுபட்ட அந்தக் குளங்களைச் சேர்த்து, அத்திக்கடவு-அவினாசி திட்டம்-II என்ற திட்டம் தயாரித்து அறிவித்தார்கள். அந்தத் திட்டத்திற்கும் விரைவாக நிதி ஒதுக்கீடு செய்து, விடுபட்ட குளங்களுக்கும் தண்ணீர் நிரப்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்றைக்கு பதில் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் அவையில் இல்லையென்று கருதுகிறேன். அத்திக்கடவு-அவினாசி திட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்பதை யாரும் இல்லையென்று சொல்லவில்லை. எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன; ஆனால், பணம் கொடுக்காமல் போய்விட்டீர்கள். இந்நிலையில், pipe கொண்டு போவதற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு ஆட்சேபணை எழுந்தது. இரண்டாவது, 'நீங்கள் pipe-ஐ கொண்டு போய்விடுங்கள், நாங்கள் அதன்மேல் பயிர் செய்துகொள்கிறோம் என்று சொன்னார்கள். இதுபோன்று இரண்டு, மூன்று கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, இப்போது ready ஆக இருக்கிறது. நாளைக்குக்கூட start செய்யலாம். (குறுக்கீடு) இதோ சொல்கிறேன், பதிலுக்கு வருகிறேன்.

2023 அக்டோபர் 11]

அந்த காளிங்கராயன் channel-லிலிருந்து 1.5 டி.எம்.சி. தண்ணீர் எடுக்க வேண்டும். Pump செய்தால்தான் தண்ணீர் போகும். நமக்கு காவிரியிலிருந்து தண்ணீர் இன்னும் வரவில்லை. காவிரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு மறுநாள் காளிங்கராயன் channel-க்கு தண்ணீர் வந்தவுடன், அடுத்த நாளே open செய்துவிடலாம்.

அடுத்து, நீங்கள் கேட்ட இரண்டாவது திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் முடிந்த பிறகு, அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான ஆய்வுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு இப்போது ready ஆக வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேய்குளம், குளையன் கரிசல்குளம், கோரம்பள்ளம் குளம் ஆகிய குளங்களுக்கு பாசனத்திற்காக தாமிரபரணி ஆறு மறுகூர் வடகாலிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்தக் குளங்கள் கடைசி குளங்களாக இருப்பதால், தண்ணீர் திறந்து விடும்போது, குளங்களில் தண்ணீர் நிரம்புவதில்லை. அதனால் குடிநீர் பற்றாக்குறையும் உள்ளது. சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவில் வாழை, நெல் பயிரிடப்படுகின்றன. குளங்களுக்கு தண்ணீர் குறைவாக கிடைப்பதால், விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. தாமிரபரணி ஆற்றில் மறுகூர் அணைக்கட்டில் மழைக்காலங்களில் வரும் உபரி நீர் வீணாகக் கடலுக்குச் செல்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் M.A., B.L., கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டால், கூடுதல் நேரம் கிடைக்கும்.

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். ஆகவே, அப்பகுதியின் வேளாண் மக்களின் நலன் கருதி மறுகூர் அணைக்கட்டு, கீழக்காலிலிருந்து பத்மநாபமங்களம், அணையாபுரம் ஊராட்சி மற்றும் சுற்று வட்டார ஊராட்சிகள் என 14 கிலோ மீட்டர் வரையிலான புறவழி பாசனக் கால்வாய் அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டு, இந்தத் திட்டத்தைக் கனிவோடு பரிசீலனை செய்து, நிறைவேற்றித்

தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேய்குளத்திற்கு தண்ணீர் கேட்கிறார். நல்ல குளங்களுக்கு தண்ணீர் கேளுங்கள். பேய்குளத்திற்கு தண்ணீர் கேட்கிறீர்கள். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அங்கிருக்கிறவர்கள் எல்லோரும் நல்லவர்கள்தான்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அந்தப் பகுதியில் உள்ள குளங்கள் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். எனக்கு அந்தப் பகுதி முழுவதும் அத்துப்படியானதுதான். நேற்றுதான் என்னிடம்* petition *கொடுத்தீர்கள். இப்போது கேள்வியாகக் கேட்டிருக்கிறீர்கள். உங்கள் கோரிக்கை நியாயமானதுதான். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.*

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை, மணிமுத்தாறு கோட்டம், காரைக்குடி மணிமுத்தாறு உபகோட்டத்திற்குட்பட்ட சாக்கோட்டை ஒன்றியம், களத்தூர் மற்றும் எட்டு கண்மாய்களுக்கு பாசன வசதி வேண்டி, கொட்டகுடி ஆற்றின் குறுக்கே அணையைக் கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அந்தக் கோப்பு 2020–2021-லிருந்து நிலுவையில் உள்ளது. உடனே அங்கு அணை கட்டுவதற்கு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று வருடங்களாகவே அது*

2023 அக்டோபர் 11]

நிலுவையில் இருக்கிற திட்டம். ஆகவே, இன்னும் இரண்டு வருடங்கள் அத்திட்டம் நிலுவையில் இருக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பந்தல்குடி கால்வாய் குறித்து தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சியில் இதனைப் போன்று 13 கால்வாய்கள் இருக்கின்றன. 11 கால்வாய்கள் ஏற்கெனவே சிமெண்ட் கால்வாய்களாக மாற்றப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அரசில், சிறப்பு நிதியாக 250 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்து, மதுரை மாநகராட்சியின் பழைய விரிவாக்கப்படாத மாநகராட்சியில் அந்த 11 கால்வாய்களும் சிமெண்ட் கால்வாய்களாக மாற்றப்பட்டன. ஆனால், விரிவாக்கப்பட்ட பிறகு, சொட்டதட்டி கால்வாய், கிருதுமால் கால்வாய், அவனியாபுரம் கால்வாய் மற்றும் சிந்தாமணி கால்வாய் என்று அழைக்கப்படுகிற 11 கால்வாய்களும் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் சீரமைக்கப்படாமல், புனரமைக்கப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அவற்றைப் புனரமைத்து, சீர்படுத்திக் கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்களின் கோரிக்கையும் நியாயமானதுதான். காரணம், முன்பு ஆட்சியில் இருந்தபோதே, அந்த பஸ் ஸ்டாண்ட் அருகிலிருந்து புறப்படுகிற கிருதுமால் நதியை கொஞ்சம் செப்பனிட்டு, தண்ணீரை வெளியேற்றினேன். மதுரை இப்போது பெருத்துக்கொண்டே போகிறது. ஆகையினால், இதுபோன்ற கால்வாய்கள் இடையிடையில் ஏற்பட்டு விடுகின்றன. ஆகையினால், அவற்றையெல்லாம் சீர்படுத்த வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்து அல்ல.*

கால்வாயைச் சீர்படுத்துவதைப் பொறுத்தவரையில், மாநகராட்சியின் பங்கு எவ்வளவு, நீர்வளத் துறையின் பங்கு எவ்வளவு என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள் பங்கிட்டுத் தர வேண்டும். ஏனென்றால், அவர்தான் கார்ப்பரேஷனைப் பார்க்கிறார். எங்கள் பகுதிக்கு வருவதை நான் செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

221—

நீருந்து நிலையம்

***3997—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரமடை ஊராட்சி ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்ட நீருந்து நிலையத்தை, பவானி ஆறு கூத்தமண்டியிலிருந்து பவானிசாகர் அணை நீர்த்தேக்கத்திற்கு மாற்றித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைச் சொல்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள 9 ஊராட்சிகளுக்கு, 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் நாளொன்றுக்கு 7.85 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில் காரமடை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, 6 ஊராட்சிகளிலுள்ள 114 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழுள்ள மூலையூர், தலைமை நீருந்து நிலையத்தை பவானி சாகர் அணைக்கு மாற்றித் தருமாறு கோரப்பட்டுள்ளது. மேற்படி தலைமை நீருந்து நிலையத்தில் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வு செய்யப்பட்டதில், குடிநீர் தரஅளவீடுகள்படி குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. மேலும்,